## வகுப்பு - 8 - புவியியல்
## 4. இடம் பெயர்தல் மற்றும் நகரமயமாதல்

**பயிற்சி வினாக்கள்:**

1. இடம்பெயர்வுக்கான இழு காரணிகளாக அல்லாதவை எது?

1. ஆரோக்கிய பராமரிப்பு 2. வேலைவாய்ப்பு

3. கல்வி 4. ஏழ்மை

2. இடம்பெயர்வுக்கான உந்து காரணிகளாக அல்லாதவை வை?

1. காலநிலை பேரிடர்கள் 2. விவசாயிகளின் வாழ்க்கை

3. அமைதி 4. போர்

3. சர்வதேச இடம்பெயர்வு அறிக்கை 2017 ஆம் ஆண்டின் படி சர்வதேச அளவில் புலம்பெயர்ந்தோர் எண்ணிக்கை எங்கு அதிகம் உள்ளது?

1. ஆப்பிரிக்கா 2. ஐரோப்பா 3. ஆசியா 4. ஆஸ்திரேலியா

4. ஆண்களின் எண்ணிக்கையை விட பெண்களின் புலம்பெயர்ந்தோர் எண்ணிக்கை அதிகம் உள்ள நாடுகளில் தவறானது எது?

1. ஐரோப்பிய நாடுகள் 2. இலத்தீன் அமெரிக்கா

3. ஆஸ்திரேலியா 4. ஆப்பிரிக்கா

5. 2017 ஆம் ஆண்டில் சர்வதேச புலம்பெயர்வில் இந்தியாவின் எண்ணிக்கை என்ன?

1. 13 மில்லியன் 2. 15 மில்லியன் 3. 17 மில்லியன் 4. 19 மில்லியன்

6. மந்தை இடமாற்றம் என்பது எந்த வகையைச் சார்ந்தது?

1. நீண்டகால இடப்பெயர்வு 2. பருவகால இடப்பெயர்வு

3. குறுகிய கால இடப்பெயர்வு 4. எதுவும் அல்ல

7. இடம் பெயர்தலின் முக்கிய விளைவுகள் அல்லாதவை எது?

LIVEWORKSHEETS

1. மக்கள் தொகை விளைவுகள்
2. பொருளாதார விளைவுகள்
3. சமூக விளைவுகள்
4. சமய விளைவுகள்

8. _______ ஆம் ஆண்டு வரலாற்றில் முதன்முறையாக உலகளாவிய நகர்ப்புற மக்கள்தொகை ஊரக மக்கள் தொகையை விட அதிகரித்தது.

1. 2003
2. 2005
3. 2007
4. 2009

9. பண்டைய காலத்தில் நகரமயமாக்கலுக்கு முக்கிய காரணமாக இருந்தது எது?

1. உணவு தானிய மிகை
2. போக்குவரத்து வசதி
3. உறைவிட வசதி
4. இவை அனைத்தும்

10. பண்டைய கால நகரமாக அல்லாதது எது?

1. மொகஞ்சதாரோ
2. வெனிஸ்
3. ஏதென்ஸ்
4. தீப்ஸ்

11. 1950 இல் உலகின் மக்கள் தொகையில், நகர மக்கள் தொகையின் சதவீதம்

1. 20 %
2. 30 %
3. 40 %
4. 50 %

12. உலகில் மக்கள் தொகை அதிகம் உள்ள கண்டம் எது?

1. ஆசியா
2. ஆப்பிரிக்கா
3. ஐரோப்பா
4. வட அமெரிக்கா

13. உலகின் அதிக மக்கள் தொகை கொண்ட முதல் மாநகரம் எது?

1. டோக்கியோ
2. புதுடில்லி
3. சாங்காய்
4. மெக்சிகோ

14. நகரமயமாதலின் விளைவுகளில் தவறானது எது?

1. போக்குவரத்து நெரிசல்
2. தண்ணீர் விநியோகத்தில் பிரச்சினை
3. மாசடைதல்
4. சமய வழிபாட்டில் பிரச்சினை

LIVEWORKSHEETS

15. கீழ்க்கண்டவற்றுள் தவறானது எது?

அ. குடியேறுபவர் - சர்வதேச எல்லைக்கு வெளியில் இருந்து ஒரு புதிய நாட்டில் குடிபுகுபவர்கள்

ஆ. குடிபெயர்பவர் - தன்னுடைய நாட்டிலிருந்து வேறொரு நாட்டிற்கு குடியேறுபவர்

1. அ மட்டும் தவறு
2. ஆ மட்டும் தவறு
3. இரண்டும் தவறு
4. இரண்டும் சரி

16. மக்கள் இடம்பெயர்தலுக்கு வகைப்படுத்தப்பட்ட முக்கிய காரணிகள் எவை?

1. சாதகமான காரணிகள் (இழு காரணிகள்)
2. பாதகமான காரணிகள் (உந்து காரணிகள்)
3. (1) மற்றும் (2)
4. எதுவுமில்லை

17. இடம் பெயர்தலுக்கான சூழியல் அல்லது இயற்கை காரணங்கள் எவை?

1. எரிமலை வெடிப்பு
2. நில அதிர்வு
3. வெள்ளம் மற்றும் வறட்சி
4. அனைத்தும் சரி

18. இடம்பெயர்தலுக்கான பொருளாதார காரணியாக அல்லாதது எது?

1. தொழில்நுட்ப வளர்ச்சி
2. வேலைவாய்ப்பு
3. வறட்சி
4. வளமான வேளாண் நிலம்

19. இடம்பெயர்தலுக்கான சமூக மற்றும் பண்பாட்டுக் காரணங்கள் எவை?

1. பெண்களின் திருமணத்திற்கு பின் இடம்பெயர்வு
2. புனித யாத்திரைகளுடன் தொடர்புடைய இடம்பெயர்தல்
3. (1) மற்றும் (2)
4. இரண்டுமே தவறு

LIVEWORKSHEETS

20. பின்வருவற்றுள் இடம்பெயர்தலுக்கான மக்கள் தொகை சார்ந்த காரணமாக அமையாதது எது?

1. காலனி ஆதிக்கம்
2. வயது
3. பாலினம்
4. குறைந்த மக்கள் தொகை

21. ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச இடம்பெயர்வு அறிக்கை வெளியிடப்பட்ட ஆண்டு?

1. 2017
2. 2015
3. 2016
4. 2018

22. கூற்றுகளை ஆராய்க.:

கூற்று :1. ஐரோப்பா, வட அமெரிக்கா , ஆஸ்திரேலியா , லத்தீன் அமெரிக்கா கரீபியன் போன்ற நாடுகளில் புலம் பெயர்ந்தோரில் பெண்களை விட ஆண்களே அதிகம்.

கூற்று :2. ஆப்பிரிக்கா மற்றும் ஆசியா குறிப்பாக மேற்கு ஆசியாவிலும் பெண்களை விட ஆண்களே அதிகம்.

1. கூற்று 1 மற்றும் 2 சரி
2. கூற்று 1 மற்றும் 2 தவறு
3. கூற்று 1 மட்டும் 2 சரி
4. கூற்று 2 மட்டும் சரி

23. மக்களின் விருப்பத்திற்கு மாறாக இடம்பெயர்வு நடைபெறுமாயின் அது ______ இடம்பெயர்வு என அழைக்கப்படுகிறது.

1. அனிச்சையான
2. விருப்பமிகு
3. குறுகியகால
4. அத்தியாவசிய

24. மக்கள் கால்நடையுடன் இடம் பெயர்தல் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

1. தன்னார்வ இடம்பெயர்வு
2. நீண்ட கால இடம்பெயர்வு
3. மந்தை இடமாற்றம்
4. காலநிலை இடமாற்றம்

25. பின்வருவனவற்றுள் சரியான இணை எது?

ஆண்டு புலம் பெயர்ந்தோரின் எண்ணிக்கை

LIVEWORKSHEETS

1. 2000 - 173 மில்லியன்

2. 2010 - 258 மில்லியன்

3. 2017 - 220 மில்லியன்

4. 2018 - 180 மில்லியன்

26. நகரங்கள் மற்றும் மாநகரங்களில் வாழும் மக்கள் தொகையின் விகிதாச்சாரம் அதிகரிப்பதை _______ என்கிறோம்.

1. நகர வளர்ச்சி
2. நகரமயமாதல்
3. மக்கள் தொகை வளர்ச்சி
4. மக்கள் அதிகமான இடம்பெயர்வு

27. நகரமயமாதலுக்கான காரணங்கள் கீழ்க்கண்டவற்றுள் எது சரி?

அ. இயற்கையான மக்கள் தொகை வளர்ச்சி.

ஆ. ஊரகத்திலிருந்து நகர்ப்புறங்களுக்கு இடம்பெயர்தல்.

இ. நகர்ப்புறங்களை ஊரகப் பகுதிகளாக மறுசீரமைப்பு செய்தல்.

1. அ மற்றும் ஆ சரி
2. ஆ மற்றும் இ சரி
3. அ மற்றும் இ சரி
4. அனைத்தும் சரி

28. உலக நகரமயமாக்கல் விளக்கக் குறிப்பு வெளியிடப்பட்ட ஆண்டு எது?

1. 2014 2. 2012 3. 2017 4. 2015

29. பண்டைய காலத்தில் நகர்ப்புற மையங்களின் அளவு மற்றும் எண்ணிக்கை யாருடைய பெரும் காலனியாதிக்க காலங்களில் அதிகரிக்கத் தொடங்கியது?

1. கிரேக்கர்கள்
2. ரோமானியர்கள்
3. (1) மற்றும் (2)
4. எதுவுமில்லை

30. _______ ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே ஏஜியன் கடலுக்கு அருகில் பல நகரங்கள் காணப்பட்டன.

1. 6 2. 7 3. 5 4. 8

LIVEWORKSHEETS

31. இந்தியா, சீனா மற்றும் நைஜீரியா நாடுகளில் 2018 - 2050 ஆம் ஆண்டுகளுக்கு இடையிலான காலத்தில் உலக நகர்ப்புற மக்கள் தொகை வளர்ச்சியில் எத்தனை சதவீதத்தைப் பெற்றிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது?

1. 20 2. 34 3. 35 4. 45

32. தவறானதைத் தேர்ந்தெடு: (2018 - 2050 இல் எதிர்பார்க்கப்படும் நகர்ப்புற மக்கள் தொகை)

1. இந்தியா - 416 மில்லியன்

2. சீனா - 255 மில்லியன்

3. டோக்கியோ - 188 மில்லியன்

4. நைஜீரியா - 159 மில்லியன்

33. இடைக்காலம் _______ ஆம் நூற்றாண்டுக்குப் பிந்தைய காலத்தைக் குறிக்கிறது.

1. 12 2. 10 3. 11 4. 13

34. 13 ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஐரோப்பாவில் காணப்படாத நகரம் எது?

1. பாரிஸ் 2. இலண்டன் 3. ஜெனிவா 4. அமெரிக்கா

35. நகரமயமாக்கலின் மூன்றாம் கட்ட வளர்ச்சியைக் குறிப்பது எது?

1. இடைக்காலம் 2. நகரமயமாதல் காலம்

3. நவீன கால நகரம் 4. அனைத்தும் சரி

LIVEWORKSHEETS